**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வேதாரண்யம்.**

**முன்னிலை: திருமதி. G.சுதா, B.Sc., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,

வேதாரண்யம்.

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30- ஆம் நாள் செவ்வாய்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2058 ஸ்ரீ பராபவ வருடம் ஆனி மாதம் 16-ஆம் நாள்

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.353/2023**

**CNR. No: TNNG05-003441-2023**

| | | |
|---|---|---|
| 1. | குற்றமுறையீட்டாளர் பெயர் | அரசுக்காக:<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>வேட்டைக்காரனிருப்பு காவல் நிலையம்.<br>குற்ற எண். 97/2018. |
| 2. | எதிரிகள் | 1. மணிகண்டன், வயது 24/2018<br>த/பெ. சுப்ரமணியன்,<br>தேத்தாகுடி-வடக்கு, வேதாரண்யம் தாலுக்கா.<br>2. பாஸ்கரன், வயது 38/2018,<br>த/பெ. ராமச்சந்திரன்,<br>செம்போடை வடக்கு,வேதாரண்யம் தாலுக்கா. |
| 3. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | எதிரிகள் கைது செய்யப்படவில்லை. |
| 4. | எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 1,2 எதிரிகள் மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்ட அமர்வு நீதிமன்ற Crl.M.P.No:4082/2018 நாள்: 11.12.2018 ம் தேதிய |

SUDHA GANESAN

Digitally signed by SUDHA GANESAN
Date: 2026.06.30 16:14:46 +0530

| | | |
|---|---|---|
| | | முன்பிணை உத்தரவு படி கடந்த 21.12.2018-ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் சென்றுள்ளார்கள். |
| 5. | இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 03.06.2019 ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, 03.06.2019 ஆம் தேதி C.C.No.74/2019 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது. பின்பு மாண்புமிகு மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தின் A.No. 333/2022, நாள்: 11.11.2022 ன் படி கீழ்வேளூர் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு மீண்டும் மேற்படி நீதிமன்றத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு மாண்புமிகு மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தின் A.No. 297/2023, நாள்: 16.09.2023 ன் படி பெறப்பட்டு 03.11.2023 ம் தேதி இந்நீதிமன்றத்தில் CC.No: 353/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது. |
| 6. | கு.வி.மு.ச.பிரிவு 281-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து எதிரிகளிடம் கேட்கப்பட்ட நாள் | 22.09.2020 |
| 7. | வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | 1 வது எதிரியின் மீது பிரிவுகள் 294(b), 324, 506(ii) IPC - ன் கீழும், 2 வது எதிரியின் மீது பிரிவுகள் 294(b), 352, 506(ii) IPC - ன் கீழும் |
| 8. | எதிரிகளின் கோரிக்கை | பொய் வழக்கு, குற்றவாளிகள் இல்லை. |

| | | |
|---|---|---|
| 9. | இவ்வழக்கில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழான மனுக்கள் நீங்கலாக இதர தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மற்றும் அவைகள் மீதான உத்தரவு, அது சம்பந்தான மேல் முறையீட்டு உத்தரவு | - |
| 10. | இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் நாள் விபரம் | <table><tr><th>அரசு தரப்பு/ எதிரி தரப்பு சாட்சிகள்</th><th>முதல் விசாரணை நாள்</th><th>குறுக்கு விசாரணை நாள்</th></tr><tr><td>அ.சா.1</td><td>25.11.2021</td><td>25.11.2021</td></tr><tr><td>அ.சா.2</td><td>25.11.2021</td><td>25.11.2021</td></tr><tr><td>அ.சா.3</td><td>25.11.2021</td><td>25.11.2021</td></tr><tr><td>அ.சா.4</td><td>30.11.2021</td><td>30.11.2021</td></tr><tr><td>அ.சா.5</td><td>30.11.2021</td><td>30.11.2021</td></tr><tr><td>அ.சா.6</td><td>29.09.2022</td><td>29.09.2022</td></tr><tr><td>அ.சா.7</td><td>29.06.2026</td><td>29.06.2026</td></tr></table> |
| 11. | நீதிமன்றத்தின் முடிவு | முடிவில், 1 வது எதிரி பிரிவுகள் 294(b), 324, 506(ii) IPC - ன் கீழும், 2 வது எதிரி பிரிவுகள் 294(b), 352, 506(ii) IPC - ன் கீழும், குற்றவாளிகள் இல்லை என தீர்மானிக்கப்பட்டது. |
| 12. | தீர்ப்புரை | முடிவில் 1 வது எதிரிக்கு எதிரான பிரிவுகள் 294(b), 324, 506(ii) IPC- ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்தும், 2 வது எதிரிக்கு |

| | | |
|---|---|---|
| | | எதிரான பிரிவுகள் 294(b), 352, 506(ii) IPC- ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்தும், கு.வி.மு.ச பிரிவு 248(1) ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது. |
| 13. | வழக்கு சொத்து குறித்த உத்தரவு | இவ்வழக்கு சம்பந்தமாக வழக்குச் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, வழக்குச் சொத்துப்பற்றி உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. |

இந்த ஆண்டுப்பட்டிகை வழக்கு 03.11.2023-ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று 30.06.2026 ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K.S. வெங்கடேஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற கவனமாக பரிசீலனையில் இருந்துவந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ...

## <u>தீர்ப்புரை</u>

கடந்த 07.11.2018 ம் தேதி மாலை 19.00 மணியளவில் தாமரைப்புலம் கடைத்தெரு, பாஸ்கர் என்பவரது பெட்டிக்கடையில் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் வெங்கட்ராமன் தனது அண்ணன் மருமகன் வீரமுத்துவிடம் ஏன் தகராறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்காக 1வது எதிரி நிகழ்நிலை புகார்தாரரை நீ யாருடா

ஒக்கால ஓழி கேட்குறதுக்கு என்று திட்டி, கையில் வைத்திருந்த பேனா கத்தியால் நிகழ்நிலை புகார்தாரரின் முன் தலையில் குத்தி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், கத்தியை காட்டி கொலை மிரட்டல் செய்தும், 2 வது எதிரி நிகழ்நிலை புகார்தாரரை ஒக்கால ஓழி இவன யாருடா இங்குவிட்டது என்று திட்டி, முகத்தில் கையால் குத்தியும், கடையிலிருந்த சோடா பாட்டிலை எடுத்து உடைத்து இனிமே இந்த கடைப்பக்கம் வந்தீன்னா உன்னை கொலை செய்யாம விடமாட்டேன் என்று மிரட்டியுள்ளார். எனவே 1வது எதிரியின் குற்றச்செய்கையானது பிரிவுகள் 294(b), 324, 506(ii) IPC - ன் படியும், 2 வது எதிரியின் குற்றச்செய்கையானது பிரிவுகள் 294(b), 352, 506(ii) IPC - ன் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக வேட்டைக்காரனிருப்பு காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. அரசுத்தரப்பில் தாக்கலான இறுதி அறிக்கை உரிய பரிசீலனைக்கு பிறகு இந்நீதிமன்ற கோப்பிற்கு பிரிவுகள் 294(b), 324, 352, 506(ii) IPC -ன் கீழ் எடுக்கப்பட்ட பின்னர், எதிரிகளுக்கு இந்நீதிமன்றத்தில் ஆஜராவதற்கான அழைப்பாணை வழங்கப்பட்டது. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், எதிரிகளுக்கு அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 207 கு.வி.மு.ச-வின் படி இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்பு அரசு தரப்பு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து, 1 வது

எதிரிக்கு எதிராக பிரிவுகள் 294(b), 324, 506(ii) IPC - ன் படியும், 2 வது எதிரிக்கு எதிராக பிரிவுகள் 294(b), 352, 506(ii) IPC - ன் படியும் குற்றச்சாட்டுகள் விளக்கி வினவ, பொய் வழக்கு என்றும், தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்றும் மறுத்துரைத்தார்கள்.

3. அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டு அரசு தரப்பில் 1 முதல் 7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 1 முதல் 7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் யாதொரு சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் மற்றும் சான்று பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4(1). அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :**

இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்கு பதிலாக விசாரிக்கப்பட்ட வேட்டைக்காரனிருப்பு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சுப்பிரமணியன்-அ.சா.7 வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் - பட்டியல் சாட்சி.11 திரு. அருண்குமார் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் - பட்டியல் சாட்சி.12 திரு. பசுபதி என்பவர்களுக்காக கூடுதல் சாட்சியமளித்துள்ளார். வேட்டைக்காரனிருப்பு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் - பட்டியல் சாட்சி.11 திரு. அருண்குமார் கடந்த 14.11.2018-ஆம் தேதி நிலையம் ஆஜராகி அ.சா.1 கொடுத்த

புகாரினை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். மேற்படி புகாரில் 1வது எதிரி அ.சா.1யை நீ யாருடா ஒக்கால ஓழி கேட்குறதுக்கு என்று திட்டி, கையில் வைத்திருந்த பேனா கத்தியால் அ.சா.1 ன் முன் தலையில் குத்தி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், கத்தியை காட்டி கொலை மிரட்டல் செய்தும், 2 வது எதிரி அ.சா.1யை ஒக்கால ஓழி இவன யாருடா இங்குவிட்டது என்று திட்டி, முகத்தில் கையால் குத்தியும், கடையிலிருந்த சோடா பாட்டிலை எடுத்து உடைத்து இனிமே இந்த கடைப்பக்கம் வந்தீன்னா உன்னை கொலை செய்யாம விடமாட்டேன் என்று மிரட்டியுள்ளார் என்றும் கூறியுள்ளார்.

4(2). அ.சா.1 பிறழ் சாட்சியாகியுள்ளார். அ.சா.1 மூலமாக புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. காவல் உதவி ஆய்வாளர் - பட்டியல் சாட்சி.12 திரு. பசுபதி அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் சங்கர் மற்றும் துரைராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களையும், மகஜர் சாட்சிகளையும் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்த வேதாரண்யம் அரசு மருத்துவமனை மருத்துவர்கள் சுதர்சன் மற்றும் வினோத்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளை விசாரணை செய்ததில் சக்கரை (எ) விக்னேஷ் மற்றும் சீனி (எ) விஜய் ஆகிய

இருவரும் வழிமறிக்கவோ, சம்பவ இடத்திலோ இல்லை என்பதால் மேற்படி எதிரிகளை வழக்கிலிருந்து நீக்கறவு செய்து வழக்கின் சட்டப்பிரிவை 294(b), 342, 324, 352, 506(ii) IPC -லிருந்து சட்டப்பிரிவுகள் 294(b), 324, 352, 506(ii) IPC ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார். பின்பு தனது புலன் விசாரணையை முடித்து எதிரிகளின் மீது 08.03.2019 ம் தேதி பிரிவுகள் 294(b), 324, 352, 506(ii) IPC-இன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். அ.சா.7 மூலமாக முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர், மாதிரி வரைபடம், விபத்து பதிவேடு, காயச்சான்று மற்றும் சட்டப்பிரிவு மாற்று அறிக்கை ஆகியவை முறையே அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.7-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இத்துடன் அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளில், இவ்வழக்கு எதிரிகளுக்கு பாதகமாக அளிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் குறித்து, 29.06.2026-ஆம் தேதி பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச-வின் கீழ் இவ்வழக்கு எதிரிகளிடம் எடுத்துக்கூறி விளக்கி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அப்போது இவ்வழக்கு எதிரிகள் தங்களுக்கு எதிராக கூறப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் பொய் என்றும், வழக்கு குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டபோது பொய் வழக்கு என்றும் மறுத்துரைத்தார். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என கூறப்பட்டு, சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6. எனவே, 1 வது எதிரிக்கு எதிராக பிரிவுகள் 294(b), 324, 506(ii) IPC - ன் கீழ் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளும், 2 வது எதிரிக்கு எதிராக பிரிவுகள் 294(b), 352, 506(ii) IPC - ன் கீழ் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளும், அரசு தரப்பில் சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

7. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும் சான்றாவணங்களும் பரிசீலிக்கப்பட்டது.

8(1). அரசு தரப்பு வழக்கில் 1வது எதிரி அ.சா.1 யை நீ யாருடா ஒக்கால ஓழி கேட்குறதுக்கு என்று திட்டி, கையில் வைத்திருந்த பேனா கத்தியால் அ.சா.1 ன் முன் தலையில் குத்தி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், கத்தியை காட்டி கொலை மிரட்டல் செய்தும், 2 வது எதிரி அ.சா.1 யை ஒக்கால ஓழி இவன யாருடா இங்குவிட்டது என்று திட்டி, முகத்தில் கையால் குத்தியும், கடையிலிருந்த சோடா பாட்டிலை எடுத்து உடைத்து இனிமே இந்த கடைப்பக்கம் வந்தீன்னா உன்னை கொலை செய்யாம விடமாட்டேன் என்று மிரட்டியுள்ளார் என்று கண்டுள்ளது.

8(2). ஆனால் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 தனது சாட்சியத்தில் சுமார் 3 வருடங்களுக்கு முன்பு இரவு 08.00 மணியளவில் தாமரைப்புலம் டாஸ்மாக் கடை அருகில் தனது மருமகனிடம் தகராறு நடப்பதாக சொல்லி சென்று

பார்த்தபோது கூட்டமாக தகராறு நடந்ததாலும், இருட்டாக இருந்ததாலும் யார் தன்னை அடித்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், தகராறு செய்த கூட்டத்தில் எதிரிகளும் இருந்ததால் அவர்கள்தான் தன்னை அடித்திருப்பார்கள் என்று சந்தேகத்தின் அடிப்படையில் புகார்வாக்குமூலம் சொன்னதாகவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக சாட்சியளித்துள்ளார்.

8(3). மேலும், இவ்வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக அ.சா.2, அ.சா.4 முதல் அ.சா.6 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.2 தனது சாட்சியத்தில் தாமரைப்புலம் டாஸ்மாக் சென்றிருந்தபோது கூட்டமாக சண்டை நடந்தது என்றும், யார் யாரை அடித்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக சாட்சியளித்துள்ளார். மேலும், அ.சா.4 மற்றும் அ.சா.5 சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் சம்பவம் பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், தாங்கள் எதையும் பார்க்கவில்லை என்றும், போலீசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும், அ.சா.6 தனது சாட்சியத்தில் தாமரைப்புலம் டாஸ்மாக் கடைக்கு சென்றபோது அ.சா.1க்கும் அங்குள்ள மற்றொருவருக்கும் தகராறு நடந்தது என்றும், அவர் யார் என்று தனக்கு தெரியாது என்றும், அ.சா.1 மருத்துவமனைக்கு சென்றதாகவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக சாட்சியளித்துள்ளார்கள்.

8(4). மேலும் சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியாக அ.சா.3 விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.3 தனது சாட்சியத்தில் சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தான் எதுவும் கேள்விப்படவும் இல்லை என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் பாதகமாக சாட்சியளித்துள்ளார்.

8(5). மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்கு பதிலாக விசாரிக்கப்பட்ட கூடுதல் சாட்சி அ.சா.7 தனது சாட்சியத்தில் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியளித்துள்ளார். அ.சா.7 மூலமாக முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர், மாதிரி வரைபடம், விபத்து பதிவேடு, காயச்சான்று மற்றும் சட்டப்பிரிவு மாற்று அறிக்கை ஆகியவை முறையே அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.7-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் அ.சா.7-ன் சாட்சியத்தின் மூலம் வழக்கு சம்பவத்திற்கு பின்பு ஏற்பட்ட நிகழ்வுகளை ஊர்ஜிதம் செய்ய இயலுமே தவிர, வழக்கு சம்பவம் எவ்வாறு நடைபெற்றது என்பதை நிரூபிக்கும் வகையில் அவருடைய சாட்சியம் அமையவில்லை. சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சி அ.சா.1 மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான அ.சா.2, அ.சா.4 முதல் அ.சா.6 சாட்சிகள் ஆகியோர் பிறழ் சாட்சியாகியுள்ளதால் அ.சா.7-ன் சாட்சியத்தினை மட்டும் வைத்து எதிரிகள் குற்றம் புரிந்துள்ளார்கள் என்று முடிவுக்கு வர இயலாது.

9. எனவே மேற்படி பொருண்மைகளை வைத்து பார்க்கையில், எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி

நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. இறுதியாக, 1வது எதிரிக்கு எதிரான பிரிவுகள் 294(b), 324, 506(ii) IPC கீழான குற்றச்சாட்டுகளும், 2வது எதிரிக்கு எதிரான பிரிவுகள் 294(b), 352, 506(ii) IPC கீழான குற்றச்சாட்டுகளும் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1) ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

10. இவ்வழக்கில் எதிரிகள் மற்றும் எதிரிகளின் ஜாமின்தாரர்கள் எழுதிக் கொடுத்த பிணை ஆவணங்களை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகின்றது. இவ்வழக்கில் சான்று பொருட்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிறகு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்.........G. சுதா, B.Sc., B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், வேதாரண்யம்.

**இணைப்பு :**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் :**

அ.சா.1. : திரு. வெங்கட்ராமன் (நிகழ்நிலை புகார்தாரர்)

அ.சா.2. : திரு. நடராஜன்

அ.சா.3. : திருமதி. பிரேமா

அ.சா.4. : திரு. கண்ணன்

அ.சா.5. : திரு. சிவசுப்பிரமணியன்

அ.சா.6. : திரு. சிவக்குமார் (எ) சிவராமன்

அ.சா.7.: திரு. சுப்பிரமணியன், காவல் சிறப்பு உதவி ஆய்வாளர், வேட்டைக்காரனிருப்பு.

**அரசு தரப்பில் குறியீடுசெய்யப்பட்ட சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 14.11.2018 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 14.11.2018 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 14.11.2018 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | 14.11.2018 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 07.11.2018 | விபத்துபதிவேடு |
| அ.சா.ஆ.6 | 09.11.2018 | காயச்சான்று |
| அ.சா.ஆ.7 | 14.11.2018 | சட்டப்பிரிவு மாற்று அறிக்கை. |

**அரசு தரப்பில் குறியீடுசெய்யப்பட்ட சான்று பொருள் : இல்லை**

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் : இல்லை.**

(ஒப்பம்.........G. சுதா, B.Sc., B.L.,)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நடுவர், வேதாரண்யம்.

**நகல் - மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**

1. இந்த தீர்ப்புரையின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

2. இந்த வழக்கில் எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. இந்த வழக்கின் எதிரிகள் வழக்கு விசாரணையின் போது பிணையில் இருந்தார்கள்.

4. இந்த வழக்கில் சான்று பொருட்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை.